71—

கால்நடை மருத்துவமனை

**53116—திரு. வே. குணசீலன்:*

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், கொரக்கோட்டை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்திலே, கொரக்கோட்டை ஊராட்சியிலே கால்நடை மருத்துவமனை அமைக்கக் கேட்டிருக்கிறார்கள். அரசு விதிகளின்படி, கொரக்கோட்டை ஊராட்சியிலே கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், கோட்டபூண்டி ஊராட்சியில், கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டுமென்ற என்னுடைய மூலக் கேள்விக்கு, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே அமைத்துத் தரப்படும் என்று பதிலளித்திருந்தார்கள். ஆனால், அங்கு எந்தப் பணிகளும் நடைபெறவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதைக் கனிவோடு பரிசீலனை செய்து, அந்த இடத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர நடவடிக்கை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

2016 பிப்ரவரி 18]

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனைகளை சாதனைகளாக்கி, சாதனைகளை சரித்திரங்களாக மாற்றி, துறைகள்தோறும் திட்டங்களைத் தீட்டி, தமிழக மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

எனது துறையூர் தொகுதிக்குட்பட்ட, உப்பிலியாபுரம் ஒன்றியம், பச்சைப்பெருமாள்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைந்துள்ளது. அந்தப் பகுதியைச் சுற்றி 10–க்கும் மேற்பட்ட கிராமங்களில், 10,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. அந்தக் கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்றால், அங்கே ஐந்தாயிரம் கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே அதற்கும் மேலாக இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2016 பிப்ரவரி 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட இலுப்பநத்தம் ஊராட்சியில், ஏறத்தாழ 20 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அந்தப் பகுதியில் உள்ள மக்கள் முழுமையாக வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டிருக்கின்றார்கள். துறையால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற கால்நடை அலகிற்கேற்ப, அங்கே மூன்றாயிரத்திற்கும் மேலாக, சுமார் ஐந்தாயிரம் வரையிலே கால்நடைகளை வளர்த்து வருகிறார்கள். எனவே, அந்த ஊராட்சியிலே கால்நடைக் கிளை நிலையத்தை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பகுதியிலே அரசு விதிகளுக்குட்பட்டு, அதிகமான கால்நடை அலகுகள் இருப்பதால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவுடன் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் சங்கரன்கோவில் தொகுதியிலே, சாயமலையில் ஒரு புதிய கால்நடைக் கிளை நிலையத்தையும், அதேபோல பெருங்கோட்டூரில் ஒரு புதிய கால்நடைக் கிளை நிலையத்தையும், தற்போது மூவிருந்தாளியில் ஒரு புதிய கால்நடைக் கிளை நிலையத்தையும் வழங்கியதோடு, சாயமலை கால்நடைக் கிளை நிலையத்தை

2016 பிப்ரவரி 18]

கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்திக் கொடுத்திருப்பதற்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன். சாயமலைப் பகுதியில் தரம் உயர்த்தப்பட்டுள்ள கால்நடை மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற சாயமலை கால்நடை மருந்தகத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு நிதி ஒதுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

72—

மீன் விதைப் பண்ணை

***35613—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு பகுதியில் அரசு மீன் விதைப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்; இல்லாமை இல்லாத நிலை வேண்டுமென்ற உயர்ந்த